தகுதியுள்ள நபர்கள் என்ற நிலைமை ஏற்படுமானால் அதைப்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அறிக்கை வந்த பிறகு தக்க ஏற்பாடுகள் செய்யப்படும்.

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் இரும்பு ஆலைக்குச் சொந்தமான இடத்தில் விமான தளம் அமைக்கின்ற செயற் குறிப்பு இருக்கிறதா? அப்படி இருந்தால் எத்தனை ஏக்கரா நிலம் அந்த இடத்தில் ஒதுக்கீடு செய்வதற்கு முயற்சிஎடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான குறிப்பு இருக்கிறது. ஆனால் விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி போடவேண்டும். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்தான் அதற்குப் பதில் சொல்ல வேண்டும். ஆனால் அங்கே ஒரு விமான தளம் அமைப்பதற்கான முயற்சி நடைபெறுகிறது. எந்த இடம், எவ்வளவு ஏக்கர், எந்த நிலையில் இருக்கிறது என்பதைப் பற்றி தனியாகச் சொல்லலாம்.

தமிழ்நாட்டில் தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள்.

609—(*வினா எண். 12334) திரு. க. பாரமலை: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவு சங்கங்கள் மொத்தம் எத்தனை பதிவு செய்யப்பட்டுள்ளன?

(ஆ) அவற்றில் செயல்படுபவை எத்தனை ?

(இ) தொழிலாளா ஒப்பந்தக் கூட்டுறவு சங்கம் மறு ஒப்பந்தம் (Sub-Contract) கொடுப்பது சம்பந்தமாக புகார் ஏதும் அரசிற்கு வந்துள்ளதா ?

(ஈ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) 216, (ஆ) 130, (இ) ஆம்.

(ஈ) 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் பிரிவு 65-ன்கீழ் விசாரணைக்கு ஆணையிடப்பட்டு, விசாரணை அறிக்கை பெறப்பட்டு ஒபலூர் சரக துணைப் பதிவாளரின் பரிசீலனையில் உள்ளது.

610—(*வினா எண் 12507)—திரு. சா. ஜெயச்சந்திரன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவு சங்கம் தற்போது டெண்டர் இல்லாமல் ரூபாய் 25 ஆயிரம் வரை வேலை செய்ய அனுமதி அளித்துள்ளதை 50 ஆயிரமாக உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

செங்கல்பட்டு மாவட்டம் சைதாப்பேட்டை தாலுக்காவை பிரித்தல்.

611—(*வினா எண் 12479) திரு. ஜி. ஆனந்த கிருஸ்ணா: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு மாவட்டம், சைதாப்பேட்டை தாலுக்காவை பிரித்து, ரெட்ஹில்ஸ்-ஐ தலைமையிடமாகக் கொண்ட ஒரு வட்டம், தாம்பரத்தை தலைமையிடமாகக் கொண்ட ஒரு வட்டம் அமைக்க திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சைதாப்பேட்டை தாலுக்கா இன்றைக்கு 10 பேரூராட்சி மன்றங்களும், 4 முனிசிபாலிட்டிகளும், 4 முனிசிபல் டவுன்ஷிப்புகளும்,3 பஞ்சாயத்துக்களும், ஒரு கண்டோன்மெண்டும் அடங்கிய ஒரு பெரிய பகுதியாக இருக்கிறது. அந்தப் பகுதிக்கு இன்றைக்கு இருக்கின்ற தலைமையிடம் சென்னையில் இருக்கிறது. அந்த அலுவலகத்தில் உட்கார கூட இடம் இல்லை. நெரிச்சலாக இருக்கிறது. ஆகவே, அங்கே அதிகமான வேலை இருந்தும் ஒரு வேலையும் நடப்பது இல்லை.